## 100 நாள் வேலைத் திட்டத்தை சீர்குலைக்கும் பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி., அறிவிப்பு!

நாமக்கல், டிச.24-

100 நாள் வேலைத் திட்டத்தை சீர்குலைக்கும் பா.ஜ.க. அரசைக் கண்டித்து இன்று (24.12.2025 புதன் கிழமை) காலை 9.30 மணி அளவில் அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை, முன்னிலை ஏற்போர் விவரத்தை நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி., அறிவித்துள்ளார்.



இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

நாமக்கல் ஒன்றியம், நாமக்கல் வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில், மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி., தலைமையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நீலவானத்து நிலவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அன்புமணி, ஐக்கிய அமாத் அனைத்து பள்ளி மற்றும் அனைத்து இஸ்லாமிய இயக்கம், மாவட்ட தலைவர் அல்ஹாஜ் கே.தவுலத்கான், ஆதி தமிழர் பேரவை மணிமாறன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

புதுசத்திரம் தெற்கு ஒன்றியம், புதுசத்திரம் வடக்கு ஒன்றியம், புதுசத்திரம் வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் தலைமையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (CPIM) கந்தசாமி, தமிழ் புலிகள் கட்சி மாவட்ட செயலாளர் த.குமரவேல், ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

மோகனூர் ஒன்றியம், மோகனூர் வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில், மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர். ஜான் தலைமையில் நடைபெறுகிறது.

சேந்தமங்கலம் ஒன்றியம், சேந்தமங்கலம் வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில் கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி (மேற்கு) எஸ்.மாதேஸ்வரன் எம்.பி. தலைமையில் மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் ஜே.ரேகா பிரியதர்ஷினி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் சா.சேகர், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் முகமதுமுபீன், மனிதநேய மக்கள் கட்சி சுல்தான் பாஷா ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

கொல்லிமலை ஒன்றியம், கொல்லிமலை வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில் தமிழ்நாடு பழங்குடியினர் நலவாரிய தலைவர் கனிமொழி தலைமையில் நடைபெறுகிறது.

எருமப்பட்டி ஒன்றியம், எருமப்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில் மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் ப.இராணி தலைமையில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சித்திக் முன்னிலையில் நடைபெறுகிறது.

இராசிபுரம் ஒன்றியம், இராசிபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில் தீர்மானகுழு துணைத் தலைவர் பார் இளங்கோவன் தலைமையில் விடுதலை சிறுத்தைகள் கட்சி, மாவட்ட செயலாளர் மும்பை அர்ஜுனன்,

ஆதி தமிழர் கட்சி ராவணன், ஆதி தமிழர் பேரவை மாவட்ட தலைவர் நீல வேங்கை ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

வெண்ணந்தூர் ஒன்றியம், வெண்ணந்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில் மாவட்ட பொருளாளர் ஏ.கே.பாலச்சந்திரன் தலைமையில் தமிழ் புலிகள் கட்சி, மாவட்ட செயலாளர் வினோத் சேகுவேரா முன்னிலையில் நடைபெறுகிறது.

நாமகிரிப்பேட்டை ஒன்றியம், நாமகிரிப்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில் மாநில நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன் தலைமையில் நடைபெறுகிறது.

இவ்வாறு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில் அவர்களின் கணவரும்,மாநகர இளைஞரணி அமைப்பாளர் ஏ.எஸ். கணேஷ் லோகேஷ் தந்தையாருமான, மறைந்த மாநகர செயலாளர் ஆ.செந்தில் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளையொட்டி, கழக மாற்றுத்திறனாளிகள் அணி மாநிலத் தலைவரும், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நல வாரிய உறுப்பினரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில தலைவருமான ரெ. தங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கீரை. தமிழ்ராஜா ஆகியோர் அன்னாரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தனர். மாவட்டத் துணைச் செயலாளர் க.மதியழகன், அ.தியாகு, எம்.ரெங்கப்பன் உடன் உள்ளனர்.


## மகாத்மா காந்தி பெயரை நீக்கிய ஒன்றிய பா.ஜ.க. அரசைக்கண்டித்து,

# பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில் நான்கு இடங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர், டிச.24-

பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-



மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதியளிப்புச்சட்டத்தை சிதைத்து, அதன் திட்டப்பணிகளை சீர்குலைத்து, நிதி ஒதுக்கீட்டை குறைப்பது, மாநிலங்களின் நிதிச்சுமையை அதிகரித்து, திட்டத்தை முடக்குவது, வேலையாட்களை குறைப்பது பயனாளிகளின் எண்ணிக்கையை குறைப்பது, நம் நாட்டின் முதுகெலும்பு என்று சொன்ன அண்ணல் காந்தியடிகளின் பெயரை இத்திட்டததில் இருந்து நீக்குவது, நூறு நாள் வேலையையே இல்லாமல் செய்து, கிராம மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கத் துடிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நாசகார சதிச்செயலையும், அதற்கு ஆதரவு தரும் அ.தி.மு.க.வைக்கண்டித்தும், அந்தச் சட்டத்தை திரும்ப பெற வலியுறுத்தியும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கட்சிகளின் சார்பில், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள, பெரம்பலூர், ஆலத்தூர், வேப்பூர், வேப்பந்தட்டை ஆகிய நான்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. பெரம்பலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டமானது, மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன்(எனது), தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் முன்னிலையில் நடைபெறுகிறது.

ஆலத்தூர், வேப்பூர், வேப்பந்தட்டை ஆகிய மூன்று இடங்களில் அந்தந்த ஒன்றிய கழகச்செயலாளர்கள் தலைமையில் நடைபெறுகிறது. மொத்தம் நான்கு இடங்களில் நடைபெறும்

இந்த ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. மற்றும் தோழமைக் கட்சிகளின் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், தோழமைக்கட்சி நிர்வாகிகள்,கழக முன்னோடிகள் உள்ளிட்ட அனைவரும் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு வெற்றி பெற செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் அவிநாசி சாலையில் உள்ள தனியார் ஓட்டலில் மேற்கு மண்டலப் பொறுப்பாளர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் நடைபெற்றது. இதில் மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வன், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், கழக மாணவரணி செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி, கழக தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர். மகேந்திரன் உள்பட பகுதி கழக, ஒன்றிய கழக, நகர கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## 100 நாள் வேலைத் திட்ட ஒழிப்பு: ஒன்றிய பா.ஜ.க. அரசையும் – ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து



# கரூர் மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

**நாள் : 24.12.2025 நேரம் : காலை 10.00 மணி**

| வ.எண் | கலந்து கொள்ளும் ஒன்றிய கழகங்கள் | இடம் |
|---|---|---|
| 1. | கரூர் வடக்கு ஒன்றியம்,<br>கரூர் கிழக்கு ஒன்றியம்,<br>கரூர் மேற்கு ஒன்றியம், | கரூர் ஊராட்சி ஒன்றிய<br>அலுவலகம்<br>காதப்பாறை |
| 2. | அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றியம்,<br>அரவக்குறிச்சி மேற்கு ஒன்றியம், | அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய<br>அலுவலகம்<br>அரவக்குறிச்சி |
| 3. | க.பரமத்தி வடக்கு ஒன்றியம்,<br>க.பரமத்தி தெற்கு ஒன்றியம்,<br>க.பரமத்தி மேற்கு ஒன்றியம், | க.பரமத்தி ஊராட்சி ஒன்றிய<br>அலுவலகம்<br>க.பரமத்தி |
| 4. | தாந்தோணி கிழக்கு ஒன்றியம்,<br>தாந்தோணி மேற்கு ஒன்றியம் | தாந்தோணி ஊராட்சி ஒன்றிய<br>அலுவலகம்<br>தாந்தோணிமலை |
| 5. | கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றியம்,<br>கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றியம்,<br>கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றியம் | கிருஷ்ணராயபுரம் ஊராட்சி<br>ஒன்றிய அலுவலகம்<br>கிருஷ்ணராயபுரம் |
| 6. | கடவூர் வடக்கு ஒன்றியம்,<br>கடவூர் மேற்கு ஒன்றியம்,<br>கடவூர் தெற்கு ஒன்றியம், | கடவூர் ஊராட்சி<br>ஒன்றிய அலுவலகம்<br>தரகம்பட்டி |
| 7. | குளித்தலை கிழக்கு ஒன்றியம்,<br>குளித்தலை மேற்கு ஒன்றியம், | குளித்தலை ஊராட்சி ஒன்றிய<br>அலுவலகம்<br>வைகைநல்லூர் |
| 8. | தோகைமலை மேற்கு ஒன்றியம்,<br>தோகைமலை கிழக்கு ஒன்றியம் | தோகைமலை ஊராட்சி ஒன்றிய<br>அலுவலகம்<br>தோகைமலை |

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் - மாநில நிர்வாகிகள் மாவட்ட, மாநகர நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், மற்றும் மதச் சார்பற்ற கூட்டணிக் கட்சியைச் சார்ந்த நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ.**
செயலாளர்
கரூர் மாவட்ட தி.மு.க.

## சோழிங்கநல்லூர் 199வது வட்டக் கழகக் கூட்டம்!

சென்னை, டிச.24–

சோழிங்கநல்லூர் தொகுதி காரப்பாக்கம் 198–வது வட்டத்தில், என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி ஆலோசனை கூட்டம் தொகுதி பொறுப்பாளர் டாக்டர். நா.சந்திரபாபு மற்றும் சோழிங்கநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினார்கள்.

வட்டக் கழக செயலாளர் பா தேவகுமார் அவர்களின் தலைமையில் 22/12/2025 அன்று 381 மற்றும் 381–வது பாகங்களில் ”என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடியின் செயல்பாடுகளின் ஆலோசனைக் கூட்டத்தில், BLA–2 பாக நிலை முகவர்கள் அவரவர் வாக்குச்சாவடியை வெற்றி வாக்குச்சாவடியாக மாற்றுவதன் மூலமே நம் இலக்கை அடைய முடியும். வாக்கு சாவடியை வெற்றி வாக்குச் சாவடியாக மாற்றுவது எவ்வாறு என்பதற்கான வழிமுறைகளை அவரவர் பாகங்களில் அவர்களுக்கு ஒதுக்கப் பட்ட 100 குடும்பங்களை நேரில் சந்தித்து கழக ஆட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து பொது மக்களின் தேவைகளும், கோரிக்கைகளையும் பெற்று அதை நிறைவேற்றும் விதமாக பணியாற்றிட வேண்டுமென தொகுதி பொறுப்பாளர் டாக்டர். நா.சந்திரபாபு மற்றும் சோழிங்கநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. ஆகியோர்கள் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினார்.

இந்நிகழ்வில், சோழிங்கநல்லூர் மத்திய பகுதி கழக துணை செயலாளர்கள் வி.தனசேகரன், வி.வி.க்குமரேசன், திருமதி.சாந்தி பசுபதி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் தா.பஷீர், மாவட்ட பிரதிநிதி எஸ்.ஆர். உமாபதி தகவல் தொழில்நுட்ப அணி பகுதி அமைப்பாளர் பாலா மகேஷ் உள்ளிட்ட BLA–2 பாக முகவர்கள், BDA– எனும் பாக டிஜிட்டல் ஏஜென்ட் மற்றும் கழக நிர்வாகிகள்,பொது மக்கள் உள்ளிட்ட அனைவரும் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மதுரை ஏ.ஆர்.சந்திரன்

### டிசம்பர் 24 (2008)



பள்ளியில் படிக்கின்ற காலத்திலேயே பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் மீது தீவிரப் பற்றுக் கொண்டு கழகப் பணிகளில் ஈடுபட்டவர். கழக மாநாடுகள் அனைத்திலும் பங்கேற்றவர். மதுரை முத்துவுடன் சேர்ந்து கழகம் வளர்க்கப் பாடுபட்டவர்.

கழகம் தொடங்கிய காலத்தில் மதுரை வடக்கு மாசி வீதியில் “மறுமலர்ச்சி படிப்பகம்” என்ற படிப்பகத்தைத் தொடங்கி அதில் முரசொலி, நம்நாடு, திராவிட நாடு போன்ற ஏடுகளை வழங்கி கழகத் தோழர்களையெல்லாம் படிக்க வைத்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் வாழ்த்துகளுடன் மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராக நியமிக்கப்பட்டு தலைவர் கலைஞர் அவர்களிடம் சிறந்த கூட்டுறவு வங்கி என்ற பாராட்டைப் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**